10th August 1955]

* 2056 *Q*.—Sri M. NARAYANA KURUP : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether any, and if so, how many house-sites have been granted for Harijans in Malabar in 1954–55; and

(*b*) whether it is a fact that the Collector or the District Welfare Officer of Malabar has reported to the Government that the problem of house-sites for Harijans does not arise in Malabar in view of the provisions of the Malabar Tenancy Act?

The Hon. Sri B. PARAMESWARAN :—" (*a*) Fifteen house-sites have been granted.

" (*b*) No, Sir."

Sri A. IYANAR :—" நிலங்களை அளந்து ஜாரி செய்வதில் காலதாமதம் ஏற்படுவதால், ஒவ்வொரு தாலூகாவிலோ ஒவ்வொரு ஜில்லாவிலோ ஒரு சர்வேயரை ஹரிஜன் டிபார்ட்மெண்டில் நியமிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களா ? "

The Hon. Sri B. PARAMESWARAN :—" ரெவினியூ போர்டுக்குக் கலெக்டர்கள் மாதத்துக்கு ஒரு முறை எவ்வளவு மனைக்கட்டுகள் ஹரிஜனங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்ற தகவல் கொடுக்கும்படி உத்திரவு போட்டிருக்கிறோம். ரெவினியூ போர்டு அரசாங்கத்தாருக்கு மாதாமாதம் அந்த ஜாபிதாவை சமர்ப்பிக்கிறார்கள்."

Sri P. G. MANICKAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, நிலங்களைப் பெறுவதிலும் தற்போது நிலச் சொந்தக்காரர்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் ஒருவருக்குக் கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் அந்த நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலங்களை ஹரிஜனங்களுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். அதனால்தான் நிலங்களை ஜாரி செய்வதில் பலவித கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகையால் ஹரிஜனங்களுக்கு அந்த நிலங்களைக் கொடுப்பதற்கு கம்பல்சரி அக்விஸிஷன் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ? "

The Hon. Sri B. PARAMESWARAN :—" அது சட்டத்திலேயே இருக்கிறது. எங்கெங்கே அவசியம் இருக்கிறதோ அங்கெல்லாம் கம்பல்சரி அக்விஸிஷன் செய்யலாம் ? "

Sri P. K. THIRUMURTHI :—" இப்போது சட்டத்தில் இதற்கான ஷரத்து இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் காலாகாலத்தில் ஹரிஜனங்களுக்கு நிலம் வாங்கிக் கொடுப்பதற்கு அது உபயோகப்படுகிறதில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு உடனடியாக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ? "

The Hon. Sri B. PARAMESWARAN :—" வேண்டியதெல்லாம் செய்துகொண்டுதான் இருக்கிறோம்."

Sri R. KRISHNASWAMI NAIDU :—" ஹரிஜனங்களுக்கு வீட்டுமனைகளுக்காகவும் இதர சௌகரியங்களுக்காகவும் சர்க்காரிடமிருந்து நிலங்கள் வாங்கிக் கொடுக்க ஒவ்வொரு தாலூகாவிற்கும் தனியாக ஒரு ரெவினியூ இன்ஸ்பெக்டர் இருந்தார். இப்பொழுது அந்த மாதிரி தனியாக ஒரு உத்யோகஸ்தரும் இல்லை. இப்பொழுது ஒவ்வொரு ரெவினியூ டிவிஷனுக்கும் ஒரு ரெவினியூ இன்ஸ்பெக்டர் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டிருந்தால், காலாகாலத்தில் அந்த இடங்களில் இந்த வேலையைச் செய்ய முடியும். அதற்கான ஏற்பாட்டைச் சர்க்கார் செய்வார்களா ? "

The Hon. Sri B. PARAMESWARAN :—" டெபுடி தாசில்தார்கள் செய்ய வேண்டிய வேலையைக் கலெக்டர்கள் செய்யும்படியாக உத்திரவு

போட்டிருக்கிறோம். எங்கெங்கு அவசியமிருக்கிறதோ அங்கெல்லாம் ரிவினியூ இலாகாவின் உதவியைப் பெற்றுக்கொண்டு ஹரிஜன வெல்பேர் அதிகாரிகள் வீடு கட்டும் மனைகளை ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய உதவியைக் கொடுக்கும்படி உத்திரவு போட்டிருக்கிறோம். வீடு கட்டும் மனைகள் எந்தத் தாலூகாவில் அதிகமாக இருக்கிறதோ அங்கு கலெக்டரிடம் சொல்லி ரெவினியூ இன்ஸ்பெக்டரையாவது அனுப்பும்படியாகச் சொல்லியிருக்கிறோம். வீடு கட்டும் மனைகளின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகுமானால் நாங்கள் அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்கிறோம்.''

SRI M. NARAYANA KURUP :—" Have reports, attributed to the Chief Minister during his Malabar tour, appearing in responsible newspapers like *Mathruboomi* to the effect that Harijans in Malabar are colluding with the landholders and suffering ejectment in order to get house-sites, been brought to the notice of the Government and if so, may I know whether it is correct? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, I do not remember to have seen the particular news which the hon. Member gives me to-day. I will have to go into that report and then only can answer the question.''

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" The Hon. Minister was stating that only fifteen house-sites were granted to Harijans in Malabar. May I know from the Minister why, in spite of the fact that in 1949 the Government have ordered the lease of house-sites to Harijans and six years have passed, no action has been taken by the Government? Fifteen house-sites is only a drop in the ocean when we consider the fact that 8,000 families of poor Harijans have been ejected and ousted out of the ulkudi sites. May I know when the Government will complete the leasing of house-sites to Harijans? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, there seems to be an exaggeration in the figure suggested by the hon. Member. As far as the Government are aware, only 300 families are in need of house-sites. So, the hon. Member need not be over-enthusiastic in this matter. The Government are equally enthusiastic in the matter.''

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I wish to clarify my statement. I submit that the figure supplied by the Hon. Minister, viz., that 300 families only are in need of house-sites is not correct and I challenge the correctness of the figures and I say that it is not 300. There are thousands? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, the Malabar Tenancy Act confers fixity of tenure on tenants of kudiyiruppu (homesteads) with a right of purchase after ten years' continuous occupation. If the kudiyiruppu-holder is a Harijan, the said provision will help him. There are also ulkudis (huts) in Malabar. Ulkudidars are generally drawn from Harijans. Under the Malabar Tenancy (Amendment) Act, 1954, the holders of ulkudis with one year's standing are protected from eviction. In cases where the sites in which

huts are situated are required by landlords, the ulkudidars have to be given suitable alternative sites of equal area in any portion of the same or any other land at the disposal of the landlords in the same revenue village. Sir, in order to expedite the acquisition of house-sites for Harijans in Malabar district, a special staff of one Tahsildar and one Revenue Inspector has been sanctioned in G.O. No. 1461, dated 22nd April 1955. The Collector of Malabar has since proposed to acquire 300 ulkudis and 1,000 fifteen-cent sites for Harijans in the district. The Board of Revenue is not in favour of acquiring ulkudis, as ulkudidars are protected under the Malabar Tenancy Act. The proposals are under examination. I have given these figures and this information just to convince the hon. Member that the Government are earnest and sincere and have posted a Special Tahsildar and a Revenue Inspector. They will attend to this matter."

SRI M. CHADAYAN :—"മലബാർ കുടിയായ്മ നിയമപ്രകാരം ഉൾകുടികൾക്ക് 8-50 a.m.
അവകാശമുണ്ടെങ്കിലും ഉൾകുടികളെ ഒഴിപ്പിക്കാൻ ആയിരക്കണക്കിനുള്ള കേസ്സുകൾ സിവിൽ കോടതികളിൽ നിലവിലുണ്ടെന്നു ഗവർമ്മേണ്ടിന്നറിയാമോ? കൂടാതെ, ഹരിജനങ്ങളുടെ പുരോഗതിക്കും അഭിവൃദ്ധിക്കും വേണ്ടി ആത്മാർത്ഥമായി ശ്രമിക്കുന്ന ഉദ്യോഗസ്ഥന്മാരെ തിരഞ്ഞെടുത്തു ഹരിജൻ വെൽഫെയർ ഡിപ്പാർട്ട്മെന്റിന്റെ ചുമതല ഏല്പിക്കാൻ ഗവർമ്മേണ്ടിന്നു ഒരുക്കമാകുമോ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—"Unlike other districts Malabar is a peculiar district where we cannot acquire 5 cents of dry land and 3 cents of wet land for house-sites. Therefore the representatives of Malabar said that they must have at least 15 cents. In response to their request and wishes we are now granting 15 cents. It took nearly four or five years to find out whether protection could be given according to the Malabar Tenancy Act and therefore we could not proceed further in the matter unless that point was cleared. Now that we have appointed Special Tahsildars, I think the acquisition work will be going on. We need not worry about the figures. As I said only 300 house-sites are to be provided and if the Government feel that there is further need, they will certainly provide as many house-sites as are needed."

SRI S. RAMALINGAM :—"Sir, on a point of order. On the floor of this House the Government have repeatedly said that 15 cents would be assigned particularly in Malabar district, because of the peculiar situation of that district. Now the Hon. Minister says that 3 cents of wet land and 5 cents of dry land would be assigned. I do not know when this new policy came into force?"

THE HON. SRI B. PARAMESWARAN :—"The hon. Member did not hear me properly. In other districts it is 3 cents and 5 cents. In Malabar it is 15 cents."

SRI O. KORAN :—"May I know whether the Government have received representations from Harijans in Malabar about the

illegal eviction of ulkudis after the enforcement of the Malabar Tenancy Act, 1954, and that they have no protection? If so, have the Government made necessary enquiries and taken suitable action? ''

THE HON. SRI B. PARAMESWARAN :—'' Those cases which are brought to the notice of the Collector are being examined and suitable action is being taken.''

SRI P. G. MANICKAM :—'' ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு வேண்டிய நிலங்களை கட்டாயமாக வாங்கிக் கொடுப்பதற்கு வேண்டிய சட்டம் இருப்பதாக மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். கோயமுத்தூர் ஜில்லாவில் **174** சேரிகள் ஜாதி இந்துக்களுக்குச் சொந்தமான பட்டா நிலங்களில் இருக்கின்றன. அந்தச் சேரிகளிலுள்ள ஹரிஜனங்கள் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். இதைப் பற்றி மூன்று வருஷங்களாக சட்டசபையில் அநேக தடவைகள் தெரிவித்திருக்கிறேன். கலெக்டரவர்களைக் கேட்டால், 'கட்டாயமாக நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு உரிய வசதியில்லை' என்று சொல்கிறார். ஆகையால், தனிக் கமிட்டியொன்றையாவது ஏற்படுத்தி அப்படிப்பட்ட நிலங்களை வாங்கி ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா? ''

THE HON. SRI B. PARAMESWARAN :—'' கோயமுத்தூர் ஜில்லா கலெக்டரவர்கள், ஹரிஜனங்களுக்கு நிலம் வாங்கிக்கொடுக்கும் விஷயத்தில் சிரத்தை காட்டிக்கொண்டு வருகிறார். சட்டசபை அங்கத்தினர்கள் கலெக்டரை அணுகி, ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு எந்தெந்த இடங்களை வாங்கித்தர வேண்டுமென்று அங்கத்தினர்கள் கேட்டாலும், தான் அதற்கு ஏற்பாடு செய்வதாக கலெக்டர் என்னிடத்தில் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். நிலம் வாங்கிக் கொடுக்கும் விஷயம் மட்டுமல்ல; ஹரிஜனங்களுக்குத் தேவையான கிணறுகள் வெட்டிக்கொடுக்கும் விஷயத்திலும் சட்டசபை அங்கத்தினர்கள் தன்னிடம் வந்து கேட்டால், தான் ஆவன செய்வதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார். ஆகவே இந்த விஷயத்தை கனம் அங்கத்தினர் கலெக்டருக்குத் தயவு செய்து சொல்லும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படியும் கலெக்டர் தக்க நடிவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் போனால் ஏதாவது அங்கு கஷ்டங்கள் இருக்கும். சட்டக் கஷ்டங்களும் மற்றக் கஷ்டங்களும் இருந்திருக்கலாம். ஹரிஜனங்களுக்கு நிலம் வாங்கிக்கொடுக்கக் கூடாதென்ற எண்ணம் கலெக்டர் அவர்களுக்கு இருக்கவே இருக்காது என்று நான் நினைக்கிறேன்.''

SRI V. MUTHU :—'' பஞ்சாயத்து போர்டு 'ஏரியா' விலுள்ள நிலங்களை ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்ளுவதற்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்கும்போது, அது விஷயத்தில் பஞ்சாயத்துபோர்டார்தான் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால், கலெக்டரவர்கள், பஞ்சாயத்துபோர்டுகளுக்கு ஹரிஜனங்களுக்கு வீட்டு மனை வாங்கிக்கொடுக்கவேண்டுமென்று உத்தரவு போட்டிருந்தாலும், தங்களிடம் போதுமான நிதி வசதி இல்லையென்று பஞ்சாயத்துபோர்டார் சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, ஒன்று சர்க்காரே நேரடியாக மனைக்கட்டுகளை வாங்கி ஹரிஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும் அல்லது ஸ்தல-ஸ்தாபனங்களைத் தூண்டிவிட்டு மனைக்கட்டுகளைக் கட்டாயமாக வாங்கிக்கொடுக்கச் செய்யவேண்டும். இதில் ஏதாவதொன்றை அரசாங்கம் செய்வார்களா? ''

THE HON. SRI B. PARAMESWARAN :—'' இப்பொழுது பஞ்சாயத்து போர்டுகள், முனிசிபாலிடிகள் ஆகிய ஸ்தல-ஸ்தாபனங்களின் எல்லையில் இருக்கிற நிலங்களை ஹரிஜனங்களுக்கு வாங்கிக்கொடுப்பதிலே எவ்வளவு செலவாகின்றதோ, அந்தச் செலவை அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று விதி இருக்கிறது. அந்த நிலைமையை இப்பொழுது பரிசீலனை செய்துகொண்டு வருகிறோம். பஞ்சாயத்து 'ஏரியா' விலும், முனிசிபல் 'ஏரியா' விலும் இருக்கின்ற நிலங்களை ஹரிஜனங்களுக்கு வீடு கட்டும் மனைகளுக்காக

வாங்குவதற்கு 70 லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். நாங்கள் அது விஷயத்தில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.''

Sri M. NARAYANA KURUP :—'' We are not questioning the enthusiasm of the Government but the ineffectiveness of their policy. The Hon. Minister mentioned about kudiyiruppus. Does he know that only very few Harijans live in kudiyiruppu, but the majority of them live only in ulkudis and the protection afforded by the Malabar Tenancy Act for ulkudis is rendered nugatory, null and void because they are not able to prove possession for one year and therefore they are turned out indiscriminately out of the ulkudi holdings? Will the Government look into the matter and not rest content with the protection afforded by the Malabar Tenancy Act for the ulkudis, but on the other hand give them house-sites? ''

The Hon. Sri B. PARAMESWARAN :—'' Whether there is protection or not, whether they can be evicted or not is a matter which is being examined. As I said just now, as soon as the examination is over, Government would take necessary steps.''

Sri G. NARAYANASAMI NAIDU :—'' பல இடங்களில் ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக்காக நிலம் கொடுக்கப்பட்டாலும், நிலச் சுவாந்தார்கள் சுகாதார அதிகாரிகளைக்கொண்டு, ' இடம் வசிப்பதற்கு ஏற்றது அல்ல ' என்று முடிவு செய்யக்கூடிய விஷயம் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ? ''

The Hon. Sri B. PARAMESWARAN :—'' ஏதோ சில இடங்களில் அப்படிப்பட்ட தகவல்கள் வந்திருக்கின்றன. இருந்தபோதிலும் அரசாங்கத்தார் தகுந்த உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதாவது சுகாதார அதிகாரி எந்த நிலம் சுகாதார வசதியற்றது என்று அபிப்பிராயம் தெரிவித்தாலும் அந்த நிலத்தைப் போய்ப் பார்த்துவரும்படி கலெக்டர்களுக்கு சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.''

Sri K. T. RAJU :—'' கனம் அங்கத்தினர் ஸ்ரீ பி. ஜி. மாணிக்கம் அவர்கள் பேசும்போது கோயமுத்தூர் ஜில்லாவில் 170-க்கு மேற்பட்ட சேரிகள் ஜாதி இந்துக்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன வென்றும், அந்த நிலங்கள் ஹரிஜனங்களுக்கு ஜாரி செய்துகொடுக்கப்படவில்லையென்றும் தெரிவித்தார். கலெக்டரிடத்திலும் அவர் தெரிவித்திருக்கிறார். சட்டசபையிலும் சென்ற மூன்று வருஷகாலமாக தெரிவித்து வந்திருக்கிறார். மந்திரி அவர்களும் ' கவனிக்கப்படும் ' என்று சொல்லிவருகிறார். இதே நிலைமையில்தான் மற்ற அங்கத்தினர்களும் குறைகளைக் சொல்லி வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் நான் தெரிவிக்கக்கூடிய யோசனை என்னவென்றால், ஸ்பெஷல் அதிகாரிகளை நியமித்தாவது மூன்று மாத காலத்திற்குள்ளாக நமது ராஜ்யத்திலுள்ள எல்லா ஹரிஜனங்களுக்கும் வீட்டு வசதி ஏற்படும்பொருட்டு மனைக்கட்டுகள் வழங்குவதற்கான முறையில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா ? ''

The Hon. Sri B. PARAMESWARAN :—'' மூன்று மாதங்களுக்குள்ளாக ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுக்கமுடியும் என்று எந்த சர்க்காராலும் வாக்குறுதி கொடுக்கமுடியாது. நிலம் வழங்கும் விஷயத்தில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைப் பார்த்துத்தான் நிலம் கொடுக்கமுடியும். சில இடங்களில் நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைக் கொடுப்பதற்கு கொஞ்சம் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு சீக்கிரத்தில் மனது வருவது இல்லை, சில

இடங்களில் கொடுத்து விடுகிறுர்கள். இப்படிப்பட்ட கஷ்டங்களெல்லாம் இருக்கின்றன. அரசாங்க அதிகாரிகளின் மூலமாக எவ்வளவு துரிதமாக வேலைசெய்யமுடியுமோ அவ்வளவும் செய்கிறுர்கள். பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் இது விஷயத்தில் அவசியம் என்று நான் கருதுகிறேன்."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" On a point of information, Sir."

MR. SPEAKER :—" What is the information that the hon. Member wants. How can he have information during question time? If he wants any information, he can put a separate question."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" It is a very important matter affecting the very existence of many people."

MR. SPEAKER :—" I sympathize with the hon. Member. That is why I have allowed more than 15 minutes for a single question. I will now pass on to the next question."

Drainage scheme for Tindivanam Municipality

* 2057 *Q.*—SRI M. VENUGOPALA GOUNDER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have sanctioned any drainage scheme for Tindivanam Municipality in 1954–55;

(*b*) if so, the estimated costs thereof; and

(*c*) the approximate date by which the drainage scheme will be taken up for execution?

THE HON. SRI A. B. SHETTY :—" (*a*) No, Sir.

" (*b*) & (*c*) Does not arise."

SRI K. ARANGANATHAN :—" May I know when the drainage scheme would be taken up?"

THE HON. SRI A. B. SHETTY :—" The drainage scheme for Tindivanam Municipality is assigned the 18th rank in the priority list of the schemes to be newly provided. Therefore the scheme is not likely to be taken up for consideration in the near future."

SRI V. GOPALA GOUNDER :—" Drainage scheme will come in only with the water-supply scheme in operation. May I know the stage at which the water-supply scheme is at present?"

THE HON. SRI A. B. SHETTY :—" A separate question may be put."

9 a.m. SRI K. ARANGANATHAN :—" Since the Hon. Minister has stated that the scheme has been allotted the 18th rank in the priority list, may I know when it will be implemented?"

THE HON. SRI A. B. SHETTY :—" I have already stated that it will not be in the near future."